III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.288/2019

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 27-09-2023

| | | | |
|---|---|---|---|
| Name | : Bakiya Lakshmi | Caste | : |
| Husband's Name | : Santhosh Kumar | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இ.பி.எண்.87/2017 என்ற மனு 23.07.2019 அன்று அனுமதிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும். அதன் உத்தரவின் மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் சி.ஆர்.பி 2705/2019 தாக்கல் செய்தோம். அந்த நிறைவேற்றுதல் மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் தாவா சொத்தில் தரை தளம் மற்றும் முதல் தளம் ஆகியவற்றில் இருந்த பொருட்களை நீதிமன்றம் மூலம் ஜப்தி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்கூறிய சி.ஆர்.பி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த ஈ.பி அதன் பின்னர் டெர்மினேட் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பின்னர் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் எஸ்.எல்.பி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கின் பிராதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிராதில் உள்ள விவரங்களை நான் சொல்லிதான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அவ்விரங்களை நான் படித்து பார்த்து தான் நான் கையெழுத்து போட்டேன். நீதிமன்றத்தை பரிதிவாதிகள் ஏமாற்றி பெறப்பட்ட தீர்ப்பாணையை ரத்து செய்யவேண்டும் என பரிகாரம் கேட்டுள்ளோம். அந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வா.த.சா.14 முதல் 28 ஆவணங்களை அசல் வழக்கு எண்.12/2015 ல் எங்கள் சார்பாக பி.த.சா.1 முதல் 14 ஆக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேலும் இவ்வழக்கின் வா.த.சா.8 முதல் 12 அவ்வழக்கில் வா.த.சா.1 முதல் 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் வா.த.சா.1 முதல் 3 அவ்வழக்கினுடைய பிராது, பதிலுரை மற்றும் கூடுதல் பதிலுரையின் நகல். நாங்கள் சொல்லியிருப்பது போல் ஜூலியட் மோசடி செய்து தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பெறவில்லை என்றால் சரியல்ல.

ஆதலால் நாங்கள் கேட்டுள்ள பரிகாரங்கள் நிலைக்கத்தக்கல்ல என்றால் சரியல்ல. நாங்கள் இந்த வழக்கில் கேட்டுள்ள 1 முதல் 3 பரிகாரங்கள் ஏற்கனவே அசல் வழக்கு எண்.12/2015 ல் முடிவு செய்யப்பட்டது தான் ஆனால் அது சம்மந்தப்பட்ட தீர்ப்பாணை பிரதிவாதிகளால் ஏமாற்றி பெறப்பட்டது. இந்த வழக்கில் நாங்கள் கேட்டுள்ள பரிகாரங்கள் ஏற்கனவே நீதிமன்றத்தால் முந்தைய வழக்கில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் ஆதலால் இவ்வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. சரோஜம்மாள் இரண்டாம் பிரதிவாதிக்கு தாவா விற்றுள்ள விவரம் எங்களுக்கு தெரியும் என்றால் அவ்வாறு விற்பனை செய்யப்படவில்லை. சரோஜம்மாள் இரண்டாம் பிரதிவாதிக்கு 17.06.2008 ல் தனது பவர் ஏஜெண்ட்டான 1ஆம் பிரதிவாதி மூலமாக விற்றுள்ளார் என்றால் சரியல்ல. சரோஜம்மாள் எனக்கு 13.07.2010 அன்று உயில் எழுதி வைத்துள்ளார். தாவா சொத்து உயிலுக்கு முன்னரே கிரையம் செய்யப்பட்டுவிட்டபடியால் உயில் எழுதுவதற்கான உரிமை சரோஜம்மாளுக்கு இல்லை என்றால் சரியல்ல. சரோஜம்மாள் தாவா சொத்தை விற்கவில்லை. ஆதலால் உயில் செல்லாது என்றும் உயிலின் அடிப்படையில் நான் எனது தாயாருக்கு எழுதி கொடுத்த செட்டில்மென்ட் பத்திரமும் செல்லாது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எங்களுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றும் ஆதலால் இவ்வழக்கு நிலைக்கத்தல்ல என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளிடமிருந்து பணம் பரிக்கும் நோக்கத்தில் நாங்கள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றும் ஆதலால் இவ்வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.